# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


## பேச்சுப்போட்டி 2020 இரண்டாம் வகுப்பு

அனைவருக்கும் வணக்கம்

### மாணவர்களே கேளுங்கள்!

நான் தான் உங்கள் தாய்மொழியாம் தமிழ் மொழி பேசுகிறேன். தாய் மொழி பெற்ற தாய்க்குச் சமனன்றோ! அதனால் தானே தாய்மொழி எனப்படுகிறது. தாய் மொழியாம் என்னை அறியாதவர்கள் பெற்ற தாயை அறியாதவரே.

தாய்மொழி வழிக் கல்வி கற்பித்தலே அறிவையும் நமது கலாசாரத்தையும் வளர்க்கும். அடிப்படைச் சிந்தனையை வளர்ப்பதற்குரிய தாய் மொழியாம் தமிழை, இலக்கண பிழையின்றி கற்பதோடு பிற மொழிகளையும் கற்கலாம்.

செவ்வியல் மொழி என்று பெயர் பெற்ற என்னை அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்ல பிழையின்றி நீங்களும் என்னை (தமிழை) ஆர்வத்தோடு கற்றுக்கொளுங்கள்.

வாழ்க தமிழ்

நன்றி

வணக்கம்.